இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, பிளவு உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் சொல்கிறேன். இதுமுதல் ஒரு வீட்டிலுள்ள ஐவருள் இருவருக்கு எதிராக மூவரும் மூவருக்கு எதிராக இருவரும் பிரிந்திருப்பர். தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமியார் தன் மருமகளுக்கும், மருமகள் மாமியாருக்கும் எதிராகப் பிரிந்திருப்பர்." (லூக்கா 12:51-53

# தொலைவில் இருப்பவர்களுக்கும் கிறிஸ்துவை அறிவியுங்கள் !

## திருத்தந்தை வேண்டுகோள்!

வத்திக்கான்: டிஜிட்டல் உலகில், இயேசு கிறிஸ்துவை இன்னும் சந்தித்திராத மக்களுக்கு அவரை அறிவிக்கும் டிஜிட்டல் நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்களை ஊக்குவித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மெக்சிகோ நாட்டின் Monterrey நகரில், "திருத்தூதுப் பணிகள் 29" என்ற தலைப்பில், ஆகஸ்ட் 5 மற்றும் 6 முறையே கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாள்களில் நடைபெற்ற பன்னாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட இளையோரிடம், ஆகஸ்ட் 06, கடந்த சனிக்கிழமை மாலையில் காணொளி வழியாகப் பேசிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்.



இணையதளம், மற்றும், சமூக ஊடகங்கள் வழியாக கிறிஸ்துவை அறிவிக்கும், டிஜிட்டல் நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்கள், திருஅவையின் உயிரூட்டமுள்ள உறுப்பினர்களாக இருக்குமாறும் ஊக்கப்படுத்தியுள்ள திருத்தந்தை, ஆண்டவர் நம்முள் நுழைய நம் இதயக் கதவைத் தட்டுகிறார், அதேநேரம், நமக்குள்ளே இருக்கும் அவரை வெளியே கொணர பல முறைகள் தட்டுகிறார் என்று கூறியுள்ளார்.

### இணையதள மறைப்பணியாளர்கள்

இந்த முக்கியமான நிகழ்வில் கலந்துகொண்ட அவர்கள் அனைவரும் ஒரு குழுமமாக, திருஅவையின் மறைப்பணி வாழ்வின் ஓர் அங்கமாக இருக்கவேண்டும் என்ற தன் ஆவலைத் தெரிவித்துள்ள திருத்தந்தை, திருஅவை, புதிய எல்லைகள் மற்றும் பகுதிகளில், கடவுளின் இரக்கம் மற்றும், கனிவன்பை, படைப்பாற்றல் மற்றும், துணிவோடு அறிவிக்க ஒருபோதும் அஞ்சாது என்று எடுத்தியம்பியுள்ளார்.

கிறிஸ்துவை இன்னும் அறியாதவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதற்கு புதிய வழிகளைக் காணுமாறு, தனது அண்மை கனடா திருத்தூதுப் பயணத்தின்போது, கத்தோலிக்கரை, தான் ஊக்கப்படுத்திய தாகவும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நாம் வாழும் இடங்களில் மற்றவர் நம்மிடம் வரவேண்டும் எனக் காத்திருக்காமல், அவர்களைச் சந்தித்து அவர்கள் பேசுவதைக் கேட்டு, உரையாடுவதற்கு வாய்ப்புக்களைத் தேட, மேய்ப்புப்பணியில் படைப்பாற்றல் அவசியம் என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

இணையதளம் வழியாக நற்செய்தியை அறிவிக்கும்போது தவறுகள் இழைப்பதற்கு அஞ்சவேண்டாம் என கத்தோலிக்க இளையோரைக் கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகின் விளிம்புநிலைகளில் மறைப்பணியாற்ற முயற்சிகளை மேற்கொள்கையில் காயமடையும் திருஅவையை நான் விரும்புகிறேன் என்று கூறுவதில் ஒருபோதும் சோர்வடையமாட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

சில்லறைத்தனமான பாதுகாப்புகளுக்காக தன்னையே முடக்கிக்கொள்ளும் திருஅவை நோயுற்ற திருஅவை என்று கூறியுள்ள திருத்தந்தை, டிஜிட்டல் மறைப்பணியாளர்கள், இணையதளம், மற்றும், சமூக ஊடகங்களில், மற்றவருக்கு நல்ல சமாரியர்களாக இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இளையோர் இணையதளத்தில் மற்றவரை நன்றாக நடத்துவதன் வழியாக, அவர்களில் கடவுள் இருப்பதை சமகால இளையோர் அறிவார்கள் எனவும், இயேசுவை அறியாதவர்களுக்கு அவர் மீது நம்பிக்கையை உருவாக்குங்கள் எனவும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ்: வத்திக்கான்*

# இன்றைய மறைக்கல்வி இளையோரை ஈர்க்கிறதா!

**கூச்சிங்:** மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் (எம்.சி.சி) தலைவர் பேராயர் ஜூலியன் லியோவ், தற்போதைய மறைக்கல்வி உண்மையிலேயே நமது இளைஞர்களின் இதயங்களை ஈர்க்கிறதா என்ற கேள்வியை கவலையோடு எழுப்பினார்.

மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய அவர், நமது மாணவர்கள் உறுதிபூசுதலுக்கான மறைக்கல்வியை நிறைவு செய்வதற்கு முன், அவர்களை சீடர்களாக உருவாக்குவதில் மிகவும் திறம்பட செயல்படுவது எப்படி என்பது பற்றி ஆழமாகச் சிந்திக்க அனைவரையும் ஊக்குவித்தார். இறைவனுடன் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தையும், மாணவர்களிடையே நெருக்கமான பிணைப்பையும் அவர் வலியுறுத்தினார்.

கடந்த ஆகஸ்டு முதல் திகதி தொடங்கி 4-ம் திகதி வரை இயங்கலை வழி நடைபெற்ற மேற்கண்ட கூட்டத்தில் ஒன்பது மாமறை மற்றும் மறைமாவட்டங்களைச் சேர்ந்த அருள்பணியாளர்களும், துறவற அருட் சகோதர சகோதரிகளும் நியமிக்கப்பட்ட பொதுநிலை பணியாளர்களும் மற்றும் தேசிய மறைக்கல்வி அலுவலகத்தின் ஊழியர்களும், சிங்கப்பூர், புருணை நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அடுத்த ஆண்டு மறைக்கல்வி ஞாயிறானது சனவரி 29-ம் திகதி, 'நம்பிக்கைக் குடும்பங்களுடன் திருஅவையைப் புதுப்பித்தல்' எனும் கருப்பொருளில் கொண்டாடப்படும் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்கருப்பொருளானது 2023-ல் **'குடும்பமும் திருஅவையும்'** எனும் கருத்தோட்டத்தின் அடிப்படையில் கவனம்



செலுத்தப் படவுள்ளதையொட்டி தேர்வுச் செய்யப் பட்டதாக கூட்டத்தில் அறிவிக்கப் பட்டது.

மேலும், அடுத்த ஆண்டு மறைக்கல்வி ஞாயிறுக்கான செய்தி எதிர்வரும் நவம்பர் மாத மத்தியில் வெளிவரும் என்றும் உறுதிக்கூறப்பட்டது.

*தொடர்ச்சி அடுத்துப் பக்கம்.....*

# மனித உடலே, இறைவனில் மாட்சி பெற்றிடு!

**சிரம்பான்:** கடந்த 10 ஜூலை 2022 அன்று, சிரம்பான் மினவுதல் அன்னை பங்கில், தமிழில் உடலின் இறையியல் பயிற்சி நடைபெற்றது. இப்பங்கின் மறைக்கல்வி பணிக்குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிற்சியில் ஏற்குறைய 35 பதின்ம வயதினர் கலந்துகொண்டனர்.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் மறைக்கல்வி ஆணையத்தால் கடந்த ஈராண்டு காலத்தில் இந்த உடலின் இறையியல் பயிற்சி அருட்சகோதரி ரீத்தா அவர்களின் பெரும் முயற்சியில் தமிழில் நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. முதன்முறையாக இப்பயிற்சி கடந்த நவம்பர் மாதம் 14-15 மற்றும் 21-ம் திகதி கிள்ளான் புனித லூர்து அன்னை பங்கில் மறைக்கல்வி பதின்ம மாணவர்களுக்கு இயங்கலை வாயிலாக நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பங்குத்தந்தை அருள்பணியாளர் சேவியர் என்ரூ அவர்களின் ஆதரவில் சிரம்பான் மினவுதல் அன்னை பங்கில் நடத்தப் பட்டது. காலை 9 மணி தொடங்கி மாலை 4.00 மணிவரை நேரடியாக நடைபெற்ற இப்பயிற்சியில் உடலின் இறையியல் முக்கியத்துவம், அன்பின் பொருள் மற்றும் இறையழைத்தல், டேட்டிங், உடலின் புனிதத்தன்மை போன்ற தலைப்புகள் பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. முக்கியமாக, கடவுளின் திட்டத்தில் நாம் எவ்வாறு பங்குகொள்கிறோம் என்பது பற்றிய பகிர்வு சிறப்பிடம் பெற்றது.

பெற்றோரே பிள்ளைகளின் முதன்மை ஆசிரியர்கள் என்பதன் அடிப்படையில் அவர்களுக்கும் இப்பயிற்சியில் பங்கெடுப்பு கொடுக்கப்பட்டது. நிறைவாக, கலந்து கொண்ட பெற்றோர்களும் இளையோரும் இப்பயிற்சியின் சிறப்பு குறித்து வெகுவாகப் பாராட்டினர். இறுதி இறைவேண்டலோடு இப்பயிற்சி ஒரு முடிவை எய்தியது.



*-லோரா ஜோசப்*

## இன்றைய மறைக்கல்வி இளையோரை ஈர்க்கிறதா!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்தில் பங்கேற்றோர், குடும்பம் மற்றும் திருஅவை தொடர்பான பல காரியங்களை விவாதித்தனர். இதில் மலேசியாவின் அனைத்து மாமறை மற்றும் மறைமாவட்டங்களின் பிரதிநிதிகள், அதே போல் புருணை மற்றும் சிங்கப்பூர் பிரதிநிதிகளும், அவர்களது திட்டங்கள், அனுபவங்கள் மற்றும் சவால்களைப் பகிர்ந்து கொண்டனர். இது அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்த வேளையில், இயங்கலை மற்றும் நேரடி மறைக்கல்வி வகுப்புகள் ஒவ்வொரு மாமறை /மறைமாவட்டத்திற்கும் சந்திக்க வேண்டிய சவாலாக இருந்தது என்று கருத்துரைத்தனர்.

நிறைவாக, பேராயர் ஜூலியன் அனது இறுதி பகிர்வில், தற்காலத்தில் மறைக்கல்வி துறையில் பல சவால்கள் உள்ளன என்றும், அதற்கு தீவிரமான தீர்வுகள் தேவைப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டினார். குறிப்பாக, கோவிட் தொற்றின் காரணமாக எழுந்த கட்டுப் பாடுகளின் காரணமாக மறைக்கல்வி தடைபட்டதன் விளைவாக, வகுப்பு களுக்கு மட்டம் போடுவோரின் விகிதமும் சிறப்புத் தேவைகளும் கவனிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ள தைச் சுட்டிக்காட்டினார்.

# FRATELLI TUTTI – நாம் அனைவரும் சகோதர-சகோதரிகள்!

## ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்

**கங்கார், பெர்லிஸ்:** பிப்ரவரி 4, 2019 அன்று, திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் அல்-அஸ்ஹரின் பெரிய இமாம் ஷேக் அஹ்மத் அல்-தாய்ப் ஆகியோர் அபுதாபியில் 'மனித சகோதரத்துவம், வார்த்தை அமைதி மற்றும் ஒன்றாக வாழ்வது' என்ற அபுதாபி பிரகடனத்தில் கையெழுத்திட்டனர். இந்த பிரகடணமானது, கடவுளில் நம்பிக்கை கொண்ட அனைவரும் ஒன்றுபடவும் பணியாற்றவும் அழைக்கிறது. அனைத்து மனிதர்களையும் சகோதர சகோதரி களாக்கும் மாபெரும் தெய்வீக அருளின் விழிப்புணர்வில் ஆழ்ந்த மரியாதை பண்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக இந்த பிரகடணம் அமையும் என்று உணரப் பட்டது.

மேற்கண்ட கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் சகாப்தத்தை உருவாக்கும் சந்திப்பின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, கடந்த ஆகஸ்ட் 5, 2022 அன்று, டத்தோ துவான் குரு ஹைச். ஹாஜி ஹாஷிம் ஜாசின், முர்சியிதுல் அம் பாஸ் மற்றும் பினாங்கு ஆயர் செபாஸ்டியன் பிரான்சிஸ் மற்றும் அவர்களது தூதுக்குழுவினர் ஓர் இரவு உணவில் சந்தித்து 'Bersama Menyuburkan Kehidupan Aman dan Sejahtera'- அமைதி யான மற்றும் வளமான வாழ்க்கையை ஒன்றாக வளர்ப்போம் என உறுதிமொழி பூண்டனர். இந்த சந்திப்பை லஜ்னா தக்வா பாஸ் (Lajnah Dakwah PAS) ஏற்பாடு செய்தது.

ஆயர் செபஸ்டியன் மற்றும் துவான் குரு ஹாஷிம் இருவரும் அனைத்து மனிதர் களையும் அரவணைத்து அவர்களை ஒரே மனிதநேயத்தில் இணைக்கும் மனித சகோதரத்துவத்தைத் தொட்டு கலந்துரை யாடினர். நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் அடைவதற்கு வேறுபாடுகளைக் காட்டிலும் பொதுவான ஒற்றுமையை பேணி வளர்க்க இரு சமயத் தலைவர்களும் சக மலேசியர்களைக் கேட்டுக்கொண்டனர். பல இனங்களும் சமயங்களும் கலாச்சாரங்களும் அடங்கிய நாட்டில் வாழ ஒருவருக்கொருவர் அன்பும் மரியாதையும் நம்பிக்கையும் இருக்க வேண்டும். நம்மைப் பிரித்து வைத்திருக்கும் அனைத்து வெளிப்புற வேறுபாடுகள் அல்லது பிளவுகளைத் கடந்து மனிதகுலத்தின் மீதான அன்பின் வாழ்க்கை அனுபவங் களையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

மேற்கண்ட சந்திப்பின்போது, திருத்தந்தை யின் இத்தாலிய மொழியில் 'ஃப்ராடெல்லி




டுட்டி'(*Fratelli Tutti*) என்பதை ஆயர் செபஸ்டியன், 'நாம் அனைவரும் சகோதர சகோதரிகள் அல்லது '*Kita semua adalah Saudara*' என்ற வெளியீட்டையொட்டி பகிர்ந்துகொண்டனார். இரக்கம் அல்லது *Belas Kasihan*' என்பது இஸ்லாம் மற்றும் கிறித்துவம் இரண்டிலும் மிகவும் விலை யுயர்ந்த ஒரு பண்பு என்றும், குறிப்பாக ஏழைகள், ஆதரவற்றோர், நோயாளிகள், வீடற்றவர்கள் மற்றும் மிகவும் வறுமையில் உள்ளவர்களுக்கு உதவுவதில் கடவுளின் இரக்கம் நமக்கு வழிகாட்டும் கொள்கையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

துவான் குரு ஹாசிம் மேலும் கூறுகையில், நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக் கலாம், ஆனால் கொண்டாடப்பட வேண்டிய ஒற்றுமைகள் அதிகம் உள்ளன என்றும் இதுபோன்ற கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கருத்துரைத்தார்.

அன்று பெர்லிஸ், கங்காரில் அருள்தந்தை பிரான்சிஸ் சேவியர் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த சந்திப்பில் ஏற்குறைய 80 பங்கேற்பாளர்கள், பாஸ் அரசியல் கட்சி யைச் சேர்ந்த 45 பேரும் கத்தோலிக்கத் திருஅவையைப் பிரதிநிதித்து 35 பேரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது .

# பிளவுகளால் ஒன்றிக்கும் ஆண்டவர்!

இன்று ஆண்டின் 20 ஆம் ஞாயிறுவில் ஒன்றிணைந்துள்ள நாம், முதல் வாசகத் தில் வந்த இறைவாக்கினர் எரேமியா, தலைவர்களின் தூண்டுதலால், அந்நாட்டு அரசனால் பாழுங்கிணற்றில் இறக்கிவிடப்படு கிறார். காரணம், எரேமியா மக்களின் அமைதியைக் கெடுக்கும் வகையில் இறைவாக்குரைத்தார் என்று குற்றம் சாட்டப்பட்டார். யூதேயா பாபிலோனியர் களால் அடிமையாக்கப்படுமென்று அறிவித்ததால், அரசவையில் இருந்த தலைவர்கள் எரேமியாவுக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். இருந்த போதும் அரசரின் தயவால் அவர் காப்பாற்றப்பட்டு, மறைவாக வைக்கப்படுகிறார் என்று எரேமியா புத்தகத்தில் வாசிக்கின்றோம். இங்கு தமக்கு துன்பம் நேரும் என்று அறிந்திருந்தும் கடவுளாகிய ஆண்டவர் உரைத்ததை துணிவோடு எடுத்துரைக் கின்றார். எரேமியா தாமாக அந்த செய்திகளை அறிவிக்கவில்லை. கடவுளே அவருக்கு அதை உணர்த்தினார்.

மேலும், நம்பிக்கை என்றால் என்ன என்று வரையறை செய்துவிட்டு, தொடர்ந்து ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, சிம்சோன் என முதல் ஏற்பாட்டு குலமுதுவர்களைப் பட்டியலிட்டு அவர்கள் வாழ்வில் நம்பிக்கை வேரூன்றியிருந்த விதத்தை எடுத்துச் சொல்கிறது இரண்டாம் வாசகம்.

தீயை மூட்ட வந்தேன் என்று இயேசு கூறும் இன்றைய நற்செய்தியில், இயேசு கூறியதைக் கேட்டு அவரைப் பின்பற்றிய மக்கள் நிச்சயம் குழம்பியும், மனம் குலைந்தும் போயிருப் பார்கள். ஏனென்றால், மெசியாவின் காலத்தில் மக்கள் அமைதியும் செழிப்பும் நிறைந்த வாழ்வை வாழப்போகின்றார்கள் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இயேசு கூறிய, "பிளவை உண்டாக்கவே வந்தேன், தீயை மூட்டவே வந்தேன் என்று கூறியதை சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

மத்தேயு 10: 34-ல் இயேசு, "அமைதியை அல்ல, வாளையே கொணர வந்தேன்" என்று சொல்லிவிட்டு, இருசில இறைவார்த் தைக்குப் பின்னால், "என்னைவிடத் தன் தந்தையிடமோ, தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்..." (மத் 10: 37) என்பார். இந்த இரண்டு இறைவார்த் தைகளையும் இணைத்துச் சிந்தித்துப் பார்ப்போமேயானால், ஒருவர் இயேசுவைப் பின்பற்றுவதால் அவருடைய தாயோ, தந்தையோ, சகோதரனோ, சகோதரியோ அவரை வெறுக்கலாம். அதனால் குடும் பத்தில் பிளவு உண்டாகலாம். ஆனாலும் அந்தப் பிளவு அங்கு அமைதி ஏற்படுவதற்கான ஒரு தொடக்கம் என்று கருத வேண்டும்.

மண்ணுலகில் தீமூட்டவே வந்தேன்!' என்று தான் வந்ததை அறிவிக்கும் இயேசு தன் வருகை அமைதியை அல்ல பிளவையே உண்டாக்கும் என்று சொல்வதோடு, தான் பெற வேண்டிய இரத்தத் திருமுழுக்கே அந்தப் பிளவின் முதற்கனி என்கின்றார்

எனவே, இயேசுவின்மீது கண்களைப் பதிய வைத்து, அவரது சாட்சிகளாக வாழ்கின்ற போது, சொந்தக் குடும்பமே நம்மை வெறுத்து ஒதுக்கலாம். நண்பர்கள்கூடப் பகைவர்கள் ஆகலாம். அதற்காக நாம் மனம்தளர்ந்து விடாமல், பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கி மன உறுதியோடு ஓடுவோம். இயேசுவை அல்லது இறையரசைத் தேர்ந்து கொண்டால் நாம் மற்றதை விட்டுவிடுதல் அவசியம். இதற்குத் தேவை மனத்திடம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**ஆண்டின் பொதுக்காலம் 20-ம் ஞாயிறு**

1-ம் வாசகம்: எரே: 38: 4,6, 8-10
தி. பாடல்: 40:1,2,3 17
2ம் வாசகம்: எபி 12:1-4
நற்செய்தி: லூக்கா 12: 49-53
**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**